**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2145/ஆ5/2023, நாள். 08.01.2024**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையம் – புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire Manak Award) 2022-2023ஆம் ஆண்டிற்கான மாவட்ட அறிவியல் கண்காட்சி நடைபெறுதல் – தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மாவட்ட அளவிலான கண்காட்சியில் கலந்து கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் செயல் இயக்குநர் (முகூபொ) அவர்களின் கடித எண். 2226/P1/2023, நாள்.18.12.2023 மற்றும் 04.01.2024

•••••

பார்வையில் காணும் கடிதப்படி, 2022-2023 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதிற்கு (Inspire Manak Award) தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி மாணவர்களின் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான கண்காட்சிப் போட்டி (District Level Exhibition and Project Competiton – DLEPC) நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 2022-2023ம் ஆண்டிற்கான Inspire Award-க்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இணைப்பு பட்டியலிலுள்ள மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான கண்காட்சி போட்டிகள் (District Level Exhibition and Project Competiton – DLEPC) கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ள தேதியில் நடைபெறவுள்ளதால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தங்களுடைய செயல்முறைகளை சிறப்பாக செயல்படுத்திடவும், மேலும் சம்மந்தப்பட்ட மாணவர்களுக்கு இவ்விவரம் தெரிவித்து தவறாமல் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | கண்காட்சி நடைபெறும் நாள் மற்றும் நேரம் | கண்காட்சி நடைபெறும் இடம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | 31.01.2024<br>(புதன்கிழமை)<br>காலை 10.00 மணி முதல் | டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையம், (ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி எதிரில்) சத்துவாச்சாரி,<br>வேலூர் மாவட்டம் – 632 009. | இணைப்பு பட்டியலில் உள்ள மாணவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். |

மேற்படி நடைபெறும் மாவட்ட அளவிலான கண்காட்சிப் போட்டியில் District Level Exhibition and Project Competiton – DLEPC) கலந்துக் கொள்ளும் மாணவர்களை பொறுப்பாசிரியருடன் பாதுகாப்பாகவும், குறிப்பிட்டுள்ள நாளில் குறித்த நேரத்தில் பங்கேற்கும் வகையில் அனுப்பிவைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையின் படி பெறப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல்

5/ ... 08.01.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

**நகல்**

1. செயல் இயக்குநர் (முகூபொ),
   தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம், சென்னை – 600 025.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் /தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு)
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   (மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)